**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>**

முன்னிலை – திரு. எம். விக்னேஷ் பிரபு, எம்.எல்.,
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை
**<u>O.S. No.180 of 2023</u>**
**(CNR.No.TNTM04-000586-2023)**

1. லஷ்மி,
2. ரவிச்சந்திரன், . . . வாதிகள்

// எதிர் //

1. அ.சிவசுப்பரமணியம் பிள்ளை,
2. த.நாராயணமூர்த்தி,
3. ரா.துரை,
4. க.ரங்கநாதன்,
5. ர.வேலு,
6. ச.சத்யா,
7. அ.பார்த்தசாரதி,
8. அ.அன்பரசன், . . . பிரதிவாதிகள்

இவ்வழக்கானது செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்தநிலையில் திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிபதி உத்தரவிற்கிணங்க விடுவி.எண்.5664/2024 தேதி 30.10.2024 ன் கீழ் கூடுதல் சார்பு நீதிமன்றமான இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 23.02.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.மணிவண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.U.சீனிவாசன் அவர்கள் முன்னிலையாகியும், 2, 7, 8ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.T.G.செல்வி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:36:46 +0530

## <u>தீர்ப்புரை</u>

தாவா சொத்துக்களில் வாதிகளுக்குண்டான 11ல் 2பாகத்தினை 1 முதல் 8 பிரதிவாதிகள் பிரித்தளிக்க ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், அதனை அனுசரித்து ஒரு இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், தாவா சொத்துக்களில் பாகப்பிரிவினை ஏற்படுகின்ற வரையில் தாவா சொத்துக்களை 1 முதல் 8 பிரதிவாதிகள் எவ்வித பராதீனமும் செய்யக் கூடாது என ஒரு நிரந்தர தடைஉத்தரவு பிறப்பிக்க கோரியும், தாவா செலவினங்களை வாதிகளுக்கு இப்பிரதிவாதிகளே கட்டிக்கொடுக்க உத்தரவு பிறப்பிக்கவேண்டியும் தாவா தாக்கல்.

2. <u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>

ஷெட்யூல் சொத்தானது ஆதியில் ஒரு முனியம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றும்,மேற்படி முனியம்மாள்என்பவர் தனது மகனான பொன்னுசாமி நாயக்கர் என்பவருக்கு 07.04.1956 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் முன்னிலைக்கு செட்டில்மெண்ட் செய்துவிட்டார் என்றும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணமானது திருவத்திபுரம் இணைசார்பதிவாளர் -2 அலுவலக ஆவண எண்.1189/56-ன் படி பதிவு செய்து கொடுத்துவிட்டார் என்றும், அதன் பின்னர் பொன்னுசாமி நாயக்கர் 06.10.1990 அன்று காலமாகிவிட்டார் என்றும், பொன்னுசாமியின் காலாந்திரத்திற்கு பிறகு அவரது சட்டப்படியான வாரிசுகளான 1. ராஜேந்திரன், 2. முருகன், 3.அமுதா, 4. கலைச்செல்வி ஆகியோர்கள் ஆவார்கள் என்றும், அதன்பின்னர் பொன்னுசாமியின் வாரிசுகளான ராஜேந்திரன், முருகன், அமுதா, கலைச்செல்வி ஆகியோர்கள் தாவா சொத்தினை வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகள் மற்றும் ஒரு முனுசாமி ஆகியோருக்கு 27.06.2013 தேதியன்று திருவத்திபுரம் இணைசார்பதிவாளர் 2 அலுவலக ஆவண எண்.3811/2013ன் படி பதிவஹ செய்யப்பட்ட கிரைய பத்திரம் முன்னிலைக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டனர் என்றும், அவ்வாறு



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:36:53 +0530

தாவா சொத்தினை கிரையம் பெற்ற வாதிகளும், 1 முதல் 8 பிரதிவாதிகளும் மற்றும் ஒரு முனுசாமி என்பவரும் தாவா சொத்தினை கூட்டாக அடைந்து வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகள் பெயரில் பட்டாமாற்றம் செய்துகொண்டு அனுபவித்து வருகின்றனர் என்றும், தாவா சொத்தின் கூட்டுப்பங்குதாரரான முனுசாமி என்பவர் அவரின் பிரிக்கப்படாத பாகத்தினை 1ம் பிரவிதாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றம், அந்த வகையில் தாவா சொத்தில் வாதிகளுக்கும் மற்றும் 2 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தலா 11–ல் 1 பாகமும், 1ம் பிரதிவாதிக்குதாவா சொத்தில் 11ல் 2 பாகமும் உரிமையாகின்றது என்றும், தாவ சொத்தினை கூட்டாக வாங்கப்பட்டதன் காரணமே, கரடுமுரடாக உள்ள தாவா சொத்தினை சீர்படுத்தி, மனைப்பிரிவுகளாக்கி பாகம் பிரித்துக் கொள்ள வேண்டும் என்பதற்குதான் என்றும், ஆனால் 1 முதல் 8 பிரதிவாதிகள் இதுநாள்வரை அதற்கான எவ்வித முயற்சியும் எடுக்காமல் இருந்து வருகின்றார்கள் என்றும், எனவே 1ம் வாதி 1 முதல் 8 பிரதிவாதிகளுடன் இனியும் கூட்டாக அனுபவிக்க விரும்பாமல் தாவா சொத்தில் தனக்குண்டான 11ல் 1 பாகத்தினை பிரித்தளிக்க வேண்டும் என பலமுறை 1 முதல் 8 பிரதிவாதிகளை கேட்டும் 1 முதல் 8 பிரதிவாதிகள் பாகம் பிரித்து கொடுக்கவில்லை என்றும், அதனால் 1ம் வாதி 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் மற்றும் 2ம் வாதிக்கும் கடந்த 30.06.2022 தேதியன்று ஒரு வழக்கறிஞர் அறிவிப்பினை அளித்தார் என்றும், அந்த வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொண்ட பிறகும் 1 முதல் 8 பிரதிவாதிகள் 1ம் வாதிக்குரிய பாகத்தினை பிரித்தளிக்காமல் காலம் கடத்தி வந்ததால், 2ம் வாதியும் 1ம் வாதியுடன் சேர்ந்து கொண்டு, தாவா சொத்தினை 1 முதல் 8 பிரதிவாதிகளுடன் கூட்டாக அனுபவிக்க விரும்பவில்லை எனவும், அதனால் தாவா சொத்தில் வாதிகளுக்குரிய தலா 11ல் 1 பாகத்தினை

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.03.13 18:36:58 +0530

பிரித்தளிக்க வேண்டுமென கடந்த 16.03.2023 தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பினார்கள் என்றும், அதனை பெற்றுக்கொண்ட பின்னரும் 1 முதல் 8 பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாதிகளுக்குரிய தலா 11ல் 1 பாகத்தினை பிரித்துக் கொடுக்கவில்லை என்றும், மேலும் வாதிகளுக்கும் உரிமையான தாவ சொத்து குறித்து 1 முதல் 8 பிரதிவாதிகள் தப்பு பராதீனம் செய்ய முயன்று வருகின்றனர் என்றும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்குண்டான 11ல் 2பாகத்தினை 1 முதல் 8 பிரதிவாதிகள் பிரித்தளிக்க ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், அதனை அனுசரித்து ஒரு இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், தாவா சொத்துக்களில் பாகப்பிரிவினை ஏற்படுகின்ற வரையில் தாவா சொத்துக்களை 1 முதல் 8 பிரதிவாதிகள் எவ்வித பராதீனமும் செய்யக் கூடாது என ஒரு நிரந்தர தடைஉத்தரவு பிறப்பிக்க கோரியும், தாவா செலவினங்களை வாதிகளுக்கு இப்பிரதிவாதிகளே கட்டிக்கொடுக்க உத்தரவு பிறப்பிக்கவேண்டியும் தாவா தாக்கல்.

3. <u>1ம் பிரதிவாதி பரம் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>

வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவாவில் கண்டுள்ள சங்கதிகளில் இப்பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், வாதிகளுக்கும் உரிமையான தாவா சொத்து குறித்து 1 முதல் 8 பிரதிவாதிகள் தப்பு பராதீனம் செய்ய முயன்று வருகின்றனர் என்றும், இதனையறிந்து பிரதவாதிகள் 9ம் பிரதிவாதி அலுவலகத்தை அணுகி தாவா சொத்து குறித்து 1 முதல் 8 பிரதிவாதிகள் ஏதேனும் ஆவணம் ஏற்படுத்தி பத்திரப்பதிவு செய்ய முயற்சித்தால்

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.03.13 18:37:04 +0530

பத்திரப்பதிவு செய்யக்கூடாது என கேட்டுக்கொண்டனர் எனவும், அதற்கு 9ம் பிரதிவாதி நீதிமன்ற தடையுத்தரவு இல்லாமல் தன்னால் பத்திரப்பதிவினை தடை செய்ய இயலாது என தெரிவித்துவிட்டார் என்றும், 1 முதல் 8 பிரதிவாதிகள் பணபலம், படைபலம் மிக்கவர்கள் என்றும், சட்டத்திற்கு கட்டுப்படாதவர்கள் என்றும், தாவா சொத்தினை எந்த நேரத்திலும் தப்பு பராதீனம் செய்துவிடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் கண்டுள்ளதை, வாதிகள் தாவாவில் கோரியுள்ளத போல் தாவா சொத்துக்களில் வாதிக்களுக்குரிய 2/11 பாகத்தினை பிரித்தளிக்க இப்பிரதிவாதி தயாராக உள்ளார் என்றும், அதேபோல் தாவா சொத்துக்களில் இப்பிரதிவாதிக்குண்டான 2/11 பாகத்தினை கனம் கோர்ட்டார் அவர்கள் பிரித்தளிக்க வேண்டியும், அவ்வாறு கனம் கோர்ட்டார் அவர்கள் பிரித்தளிக்கும்பட்சத்தில் அதற்கான நீதிமன்ற கட்டணத்தை இப்பிரதிவாதி செலுத்த தயாராக உள்ளார் என்பதை இப்பிரதிவாதி கனம் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்திக்கொள்கின்றார் என்றும், ஆகவே தயவு செய்து கனம் நீதிமன்றத்தார் அவர்கள் இப்பிரதிவாதி தாக்கல் செய்யும் பதிலுரையை ஏற்று தாவா சொத்துக்களில் இப்பிரதிவாதிக்குண்டான 2/11 பாகத்தினை பிரித்தளிக்க உத்தரவிட வேண்டி 1ம் பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல்.

4. **3<u>ஆம் பிரதிவாதி பரம் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவாவில் கண்டுள்ள சங்கதிகளில் இப்பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், வாதிகளுக்கும் உரிமையான தாவா சொத்து குறித்து 1 முதல் 8 பிரதிவாதிகள் தப்பு பராதீனம் செய்ய முயன்று வருகின்றனர் என்றும், இதனையறிந்து பிரதவாதிகள் 9ம் பிரதிவாதி

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:37:09 +0530

அலுவலகத்தை அணுகி தாவா சொத்து குறித்து 1 முதல் 8 பிரதிவாதிகள் ஏதேனும் ஆவணம் ஏற்படுத்தி பத்திரப்பதிவு செய்ய முயற்சித்தால் பத்திரப்பதிவு செய்யக்கூடாது என கேட்டுக்கொண்டனர் எனவும், அதற்கு 9ம் பிரதிவாதி நீதிமன்ற தடையுத்தரவு இல்லாமல் தன்னால் பத்திரப்பதிவினை தடை செய்ய இயலாது என தெரிவித்துவிட்டார் என்றும், 1 முதல் 8 பிரதிவாதிகள் பணபலம், படைபலம் மிக்கவர்கள் என்றும், சட்டத்திற்கு கட்டுப்படாதவர்கள் என்றும், தாவா சொத்தினை எந்த நேரத்திலும் தப்பு பராதீனம் செய்துவிடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் கண்டுள்ளதை, வாதிகள் தாவாவில் கோரியுள்ளத போல் தாவா சொத்துக்களில் வாதிக்களுக்குரிய 2/11 பாகத்தினை பிரித்தளிக்க இப்பிரதிவாதி தயாராக உள்ளார் என்றும், அதேபோல் தாவா சொத்துக்களில் இப்பிரதிவாதிக்குண்டான 1/11 பாகத்தினை கனம் கோர்ட்டார் அவர்கள் பிரித்தளிக்க வேண்டியும், அவ்வாறு கனம் கோர்ட்டார் அவர்கள் பிரித்தளிக்கும்பட்சத்தில் அதற்கான நீதிமன்ற கட்டணத்தை இப்பிரதிவாதி செலுத்த தயாராக உள்ளார் என்பதை இப்பிரதிவாதி கனம் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்திக்கொள்கின்றார் என்றும், ஆகவே தயவு செய்து கனம் நீதிமன்றத்தார் அவர்கள் இப்பிரதிவாதி தாக்கல் செய்யும் பதிலுரையை ஏற்று தாவா சொத்துக்களில் இப்பிரதிவாதிக்குண்டான 1/11 பாகத்தினை பிரித்தளிக்க உத்தரவிட வேண்டி 3ம் பிரதிவாதியால் எதிர்உரை தாக்கல்.

5. 4**<u>ஆம் பிரதிவாதி பரம் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவாவில் கண்டுள்ள சங்கதிகளில் இப்பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், வாதிகளுக்கும் உரிமையான



M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.03.13 18:37:17 +0530

தாவா சொத்து குறித்து 1 முதல் 8 பிரதிவாதிகள் தப்பு பராதீனம் செய்ய முயன்று வருகின்றனர் என்றும், இதனையறிந்து பிரதவாதிகள் 9ம் பிரதிவாதி அலுவலகத்தை அணுகி தாவா சொத்து குறித்து 1 முதல் 8 பிரதிவாதிகள் ஏதேனும் ஆவணம் ஏற்படுத்தி பத்திரப்பதிவு செய்ய முயற்சித்தால் பத்திரப்பதிவு செய்யக்கூடாது என கேட்டுக்கொண்டனர் எனவும், அதற்கு 9ம் பிரதிவாதி நீதிமன்ற தடையுத்தரவு இல்லாமல் தன்னால் பத்திரப்பதிவினை தடை செய்ய இயலாது என தெரிவித்துவிட்டார் என்றும், 1 முதல் 8 பிரதிவாதிகள் பணபலம், படைபலம் மிக்கவர்கள் என்றும், சட்டத்திற்கு கட்டுப்படாதவர்கள் என்றும், தாவா சொத்தினை எந்த நேரத்திலும் தப்பு பராதீனம் செய்துவிடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் கண்டுள்ளதை, வாதிகள் தாவாவில் கோரியுள்ளத போல் தாவா சொத்துக்களில் வாதிக்களுக்குரிய 2/11 பாகத்தினை பிரித்தளிக்க இப்பிரதிவாதி தயாராக உள்ளார் என்றும், அதேபோல் தாவா சொத்துக்களில் இப்பிரதிவாதிக்குண்டான 1/11 பாகத்தினை கனம் கோர்ட்டார் அவர்கள் பிரித்தளிக்க வேண்டியும், அவ்வாறு கனம் கோர்ட்டார் அவர்கள் பிரித்தளிக்கும்பட்சத்தில் அதற்கான நீதிமன்ற கட்டணத்தை இப்பிரதிவாதி செலுத்த தயாராக உள்ளார் என்பதை இப்பிரதிவாதி கனம் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்திக்கொள்கின்றார் என்றும், ஆகவே தயவு செய்து கனம் நீதிமன்றத்தார் அவர்கள் இப்பிரதிவாதி தாக்கல் செய்யும் பதிலுரையை ஏற்று தாவா சொத்துக்களில் இப்பிரதிவாதிக்குண்டான 1/11 பாகத்தினை பிரித்தளிக்க உத்தரவிட வேண்டி 4ம் பிரதிவாதியால் எதிர்உரை தாக்கல்.

**6. 5ஆம் பிரதிவாதி பரம் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்**

வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா சட்டப்படி செல்லத்தக்கதல்ல

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.03.13 18:37:22 +0530

என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவாவில் கண்டுள்ள சங்கதிகளில் இப்பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், வாதிகளுக்கும் உரிமையான தாவா சொத்து குறித்து 1 முதல் 8 பிரதிவாதிகள் தப்பு பராதீனம் செய்ய முயன்று வருகின்றனர் என்றும், இதனையறிந்து பிரதவாதிகள் 9ம் பிரதிவாதி அலுவலகத்தை அணுகி தாவா சொத்து குறித்து 1 முதல் 8 பிரதிவாதிகள் ஏதேனும் ஆவணம் ஏற்படுத்தி பத்திரப்பதிவு செய்ய முயற்சித்தால் பத்திரப்பதிவு செய்யக்கூடாது என கேட்டுக்கொண்டனர் எனவும், அதற்கு 9ம் பிரதிவாதி நீதிமன்ற தடையுத்தரவு இல்லாமல் தன்னால் பத்திரப்பதிவினை தடை செய்ய இயலாது என தெரிவித்துவிட்டார் என்றும், 1 முதல் 8 பிரதிவாதிகள் பணபலம், படைபலம் மிக்கவர்கள் என்றும், சட்டத்திற்கு கட்டுப்படாதவர்கள் என்றும், தாவா சொத்தினை எந்த நேரத்திலும் தப்பு பராதீனம் செய்துவிடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் கண்டுள்ளதை, வாதிகள் தாவாவில் கோரியுள்ளத போல் தாவா சொத்துக்களில் வாதிக்களுக்குரிய 2/11 பாகத்தினை பிரித்தளிக்க இப்பிரதிவாதி தயாராக உள்ளார் என்றும், அதேபோல் தாவா சொத்துக்களில் இப்பிரதிவாதிக்குண்டான 1/11 பாகத்தினை கனம் கோர்ட்டார் அவர்கள் பிரித்தளிக்க வேண்டியும், அவ்வாறு கனம் கோர்ட்டார் அவர்கள் பிரித்தளிக்கும்பட்சத்தில் அதற்கான நீதிமன்ற கட்டணத்தை இப்பிரதிவாதி செலுத்த தயாராக உள்ளார் என்பதை இப்பிரதிவாதி கனம் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்திக்கொள்கின்றார் என்றும், ஆகவே தயவு செய்து கனம் நீதிமன்றத்தார் அவர்கள் இப்பிரதிவாதி தாக்கல் செய்யும் பதிலுரையை ஏற்று தாவா சொத்துக்களில் இப்பிரதிவாதிக்குண்டான 1/11 பாகத்தினை பிரித்தளிக்க உத்தரவிட வேண்டி 5ம் பிரதிவாதியால் எதிர்உரை தாக்கல்.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:37:29 +0530

7. **<u>6ஆம் பிரதிவாதி பரம் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவாவில் கண்டுள்ள சங்கதிகளில் இப்பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், வாதிகளுக்கும் உரிமையான தாவா சொத்து குறித்து 1 முதல் 8 பிரதிவாதிகள் தப்பு பராதீனம் செய்ய முயன்று வருகின்றனர் என்றும், இதனையறிந்து பிரதவாதிகள் 9ம் பிரதிவாதி அலுவலகத்தை அணுகி தாவா சொத்து குறித்து 1 முதல் 8 பிரதிவாதிகள் ஏதேனும் ஆவணம் ஏற்படுத்தி பத்திரப்பதிவு செய்ய முயற்சித்தால் பத்திரப்பதிவு செய்யக்கூடாது என கேட்டுக்கொண்டனர் எனவும், அதற்கு 9ம் பிரதிவாதி நீதிமன்ற தடையுத்தரவு இல்லாமல் தன்னால் பத்திரப்பதிவினை தடை செய்ய இயலாது என தெரிவித்துவிட்டார் என்றும், 1 முதல் 8 பிரதிவாதிகள் பணபலம், படைபலம் மிக்கவர்கள் என்றும், சட்டத்திற்கு கட்டுப்படாதவர்கள் என்றும், தாவா சொத்தினை எந்த நேரத்திலும் தப்பு பராதீனம் செய்துவிடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் கண்டுள்ளதை, வாதிகள் தாவாவில் கோரியுள்ளத போல் தாவா சொத்துக்களில் வாதிக்களுக்குரிய 2/11 பாகத்தினை பிரித்தளிக்க இப்பிரதிவாதி தயாராக உள்ளார் என்றும், அதேபோல் தாவா சொத்துக்களில் இப்பிரதிவாதிக்குண்டான 1/11 பாகத்தினை கனம் கோர்ட்டார் அவர்கள் பிரித்தளிக்க வேண்டியும், அவ்வாறு கனம் கோர்ட்டார் அவர்கள் பிரித்தளிக்கும்பட்சத்தில் அதற்கான நீதிமன்ற கட்டணத்தை இப்பிரதிவாதி செலுத்த தயாராக உள்ளார் என்பதை இப்பிரதிவாதி கனம் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்திக்கொள்கின்றார் என்றும், ஆகவே தயவு செய்து கனம் நீதிமன்றத்தார் அவர்கள் இப்பிரதிவாதி தாக்கல் செய்யும் பதிலுரையை ஏற்று


M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.03.13 18:37:35 +0530

தாவா சொத்துக்களில் இப்பிரதிவாதிக்குண்டான 1/11 பாகத்தினை பிரித்தளிக்க உத்தரவிட வேண்டி 6ம் பிரதிவாதியால் எதிர்உரை தாக்கல்.

8. <u>2, 7, 8 ஆம் பிரதிவாதி பரம் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>

வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவாவில் கண்டுள்ள சங்கதிகளில் இப்பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், முதலில் இந்த தாவா சொத்து வாங்கப்பட்டதன் அடிப்படைக் காரணம் அதை வீட்டுமனைப் பிரிவுகளாக மாற்றி விற்பனை செய்ய வேண்டும் என்பது தான் என்றும், அதற்கான எந்தவொரு முயற்சியையும் வாதிகளும், 1, 3 முதல் 6 பிரதிவாதிகளும் எடுக்கவில்லை என்றும், இந்த 7ஆம் பிரதிவாதி தாவா சொத்தை வீட்டுமனைப் பிரிவுகளாக மாற்றி DTCP Approval பெறுவதற்கு ஆகும் செலவையும், காலத்தையும் கூறியபோது வாதிகளும், 1, 3 முதல் 6 பிரதிவாதிகளும் தங்களால் இனி செலவுகள் செய்ய முடியாது என வாய்மொழி உடன்படிக்கைக்கு மாறாக கூறினார்கள் என்றும், மேலும் இந்த 1, 2 வாதிகளும் 1, 3 முதல் 6 பிரதிவாதிகளும் கொல்லூடாகி இத்தாவாவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், முதலில் இந்த நிலமானது மனைப்பிரிவுகளாக கருதக்கூடிய வகைப்பாடாக அரசுப் பதிவேட்டில் உள்ளது என்றும், பயிர் வைக்கும் பூமியாக அது இல்லை என்றும், இந்த சொத்தை 11 பாகங்களாக பிரித்தாலும் அதற்குரிய DTCP விதிமுறைகளின்படி சுமார் 30 அடி அகலத்திற்கு பிரதான சாலையும் 24 அடி அகலத்திற்கு துணைச் சாலையும் அமைக்கப்பட வேண்டும் என்றும், மேலும் அந்த சாலையை அரசுக்கு தானமாக பத்திரப்பதிவும் செய்து கொடுக்க வேண்டும் என்றும், அப்படி



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:37:42 +0530

இருந்தால்தான் வீட்டுமனைப் பிரிவுகளுக்கு DTCP Approval வாங்க முடியும் என்றும், இவ்விஷங்கள் அனைத்தும் இந்த வாதிகளுக்கும், 1, 3முதல் 6 பிரதிவாதிகளுக்கம் நன்றாகவே தெரியும் என்றும், தாவ சொத்தைச் சுற்றி வீட்டுமனைப்பிரிவுகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுவிட்டது என்றம், எனவே இந்த இடத்தை நிலமாக பாவித்து பிரிக்க முடியாது என்றும், அவ்வாறு பிரித்தாலும் அந்த இடத்திற்கு DTCP Approval வாங்க முடியாது என்றும், இடத்தை அனுபவிப்பதிலும், சாலை அமைப்பதிலும் சிக்கல்கள் ஏற்படும் என்றும், எனவே இந்த 2, 7, 8 பிரதிவாதிகள் வழக்கின் மற்ற தரப்பினர்களிடம் தாவா சொத்தில் DTCP விதிமுறைகளுக்கு உட்பட்டு சாலைகளை அமைத்து அந்த சாலைகளை அரசுக்கு அனைவரும் தானமாக பத்திரப்பதிவு செய்து கொடுத்த பிறகு பாகம் பிரித்துக் கொள்ளலாம்என கூறிய போது, அதற்கு மற்ற பிரதிவாதிகளும், வாதிகளம் ஒப்புக்கொள்ளலாம் என கூறிய போது அதற்கு மற்ற பிரதிவாதிகளும் வாதிகளும் ஒப்புக் கொள்ளவில்லை என்றம்,அவ்வாறு மனைப்பிரிவுகளாக பிரிக்க வேண்டும் என்று பேசியேதாவா சொத்து கிரையம் பெறப்பட்டது என்றும், எனவே DTCP விதிமுறைகளின்படி தாவா சொத்தை பிரித்துக் கொடுத்தால் தான் பின்னாளில் இப்பிரதிவாதிகள் அங்குவீடு கட்ட DTCP Approval வாங்க முடியும் என்றும்,கோர்ட்டில் பாகம் பிரித்துக் கொடுத்தாலும் அனைவரும் சேர்ந்து அதில் அமைக்கும் சாலையை அரசுக்கு தானமாக எழுதிக் கொடுத்து பத்திரப்பதிவு செய்தால் தான் வீடு கட்ட DTCP Approval கிடைக்கும் என்றும், இவ்விஷயங்கள் அனைத்தும் மறைக்கப்பட்டு இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஒருவேளை கோட்டில் பாகம பிரித்துக் கொடுத்தாலும் அமதன்பிறகு தரப்பினர்கள் அனைவரும் சேர்ந்து சாலையை அரசுக்கு தானமாக எழுதிக் கொடுக்கவும் அதற்கான செலவுகளை பிரித்து ஏற்றுக்கொள்ளவும் முன் வரமாட்டார்கள் என்றும்,

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.03.13 18:37:47 +0530

இத்துடன் இந்த 7ம் பிரதிவாதி DTCP Approval பெரும் வகையில் தாவா சொத்தை வீட்டுமனைகளாக பிரித்து ஒரு வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், அந்த வரைபடத்தில் கண்டவாறு சாலை அகலங்கள் DTCP Approval படி இருக்க வேண்டும் என்றும், இந்த விதிமுறைகளை அனுசரித்து பாகம் பிரித்துக் கொள்வதில் இந்த 2, 7, 8 பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும்,அவ்வாறு நீதிமன்றம் பாகம் பிரித்துக் கொடுக்கும் போது அதற்கு முன்பாகவே சாலையை அரசுக்கு தானமாக எழுதி பதிவு செய்து கொடுக்கவும் தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாகிறது என்றும், அப்படி இந்த நிபந்தனைக்கு வாதிகளும் மற்ற பிரதிவாதிகளும் ஒப்புக்கொள்ளவில்லை எனில் தாவாவிலேயே அவர்கள் கூறியுள்ள உடன்படிக்கையை அவர்களே மீறுவதால் வாதிகளின் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், மேலும் இந்த மனைப்பிரிவுகளை பிரித்த பிறகு சாலையை அனைவரும் அரசுக்கு தானமாக எழுதிக் கொடுக்கவும் தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும்,அதன் பிறகே DTCP Approval கிடைக்கும் என்றும்,இந்த விஷயங்கள் அனைத்தும் மறைக்கப்பட்டு வாதிகளால் இந்த தாவா தொடரப்பட்டுள்ளது என்றும், ஒருவேளை இந்த 7ஆம் பிரதிவாதி தாக்கல் செய்திருக்கும் வரைபடம் சரியில்லையென வாதிகளும் மற்ற பிரதிவாதிகளும் கருதினால் அவர்கள் DTCP விதிமுறைக்குட்பட்டு வேறு வரைபடம் தாக்கல் செய்யலாம் என்றும், சரியென நீதிமன்றம் கருதும் வரைபடத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்றும், எனவே தாவா சொத்தை மேற்கண்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு பாகம் பிரித்துக் கொள்வதில் இந்த 2, 7, 8 பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும், அவ்வாறு பிரிக்கவில்லை எனில் பிற்காலத்தில் DTCP Approval வாங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டு அனைவரும்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:37:54 +0530

சொத்துக்களை அனுபவிக்க முடியாமல் போய்விடும் என்பதை பணிவுடன் நீதிமன்றத்திற்கு இப்பிரதிவாதிகள் தெரிவித்துக் கொள்கிறார்கள் என்றும், இத்தாவாவிற்கு வியாஜ்ஜியமூலமே கிடையாது என்றும், தாவாவில் கூறியுள்ள வியாஜ்ஜியமூலம் தவறு என்றும், தாவாவில் செலுத்தியுள்ள நீதிமன்றக்கட்டணம் தவறு என்றும், தாவாவில் குறிப்பிட்டுள்ள தாவ சொத்துக்களின் மதிப்பு விவரமும் தவறு என்றும், மேலும் இந்த பாகம் பிரிக்கப்படாத சொத்துக்களின் மதிப்பு விவரமும் தவறு என்றும்,மேலும் இந்த பாகம் பிரிக்கப்படாத சொத்துக்களில் இந்த 2,7,8 பிரவிாதிகளுக்கு 3/11 பாகம் உரிமை உள்ள நிலையில் அவர்களின் பங்குகளை அத்து பிரிக்காமல் இப்பிரதிவாதிகள் விற்பனை செய்ய அவர்களுக்கு முழு உரிமையுள்ளது என்றும், இதை தடை செய்ய வாதிகளுக்கு எந்த உரிமையும் சட்டப்படி கிடையாது என்றும்,மேம் இதே 1ஆம் வாதி மற்றொரு பங்குதாரரான ஒரு முனுசாமி என்பவரின் பங்கினை கிரையம் பெற்றுவிட்டு இப்பிரதிவாதிகள் மீது சட்டப்படி நிலைக்கத்தகாத தடையுத்தரவினை கோரியிருப்பது சட்டப்டி ஏற்புடையதல்ல என்றும், எனவே தாவா இந்த பரிகாரத்தை பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், ஒருவேளை மேற்படி வழக்கில் இந்த வாதிகள் இருவருக்கும் கனம் கோர்ட்டார் அவர்கள் பாகம் பிரித்து கொடுக்க தாவாவை அனுமதிக்கும் பட்சத்தில் இந்த 2, 7, 8 பிரவிாதிகள் மூவருக்கும் தாவா சொத்தில் அவர்களுக்குரிய தலா 1/11 பாகத்தை தனித்தனியே பிரித்துக் கொடுக்க வேண்டி நீதிமன்றக்கட்டணமாக தனித்தனியே ரூ.5,000/-, ரூ.5000/-,ரூ.5000/- என மொத்தம்ரூ.15000/- நீதிமன்ற கட்டணமாக செலுத்தும் உரிமையை இதன் மூலம் 2,7,8 பிரதிவாதிகள் ரிசர்வ் செய்து கொள்வதாகவும், ஆகவே மேற்கண்ட சங்கதிகளை ஏற்று தாவா சொத்தினை DTCP விதிமுறைகளுக்கு உட்பட்டு,

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.03.13 18:37:59 +0530

அமைக்கப்போகும் சாலைகளை அரசுக்கு தானமாக வாதிகளும் இப்பிரதிவாதிகளும் பத்திரப்பதிவு செய்துவிட்டு அதன்பிறகு அனைவருக்கும் பாகம் பிரித்துக் கொடுப்பதில் இந்த 2, 7, 8 பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லையென 2, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல்.

9. வாதிகளின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை பரிசீலிக்கப்பட்டு பின்வரும் வழக்கெழு வினாக்கள் 20.12.2024 தேதியன்று வனையப்பட்டுள்ளன.

1. தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 11–ல் 2 பாகம் உரிமையுள்ளதா ?
2. தாவா சொத்துக்களை பொறுத்து 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா ?
3. தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா ?
4. வேறு என்ன பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது ?

10. வாதி தரப்பில் 1–ம் வாதி திருமதி. லட்சுமி வா.சா.1 ஆகவும், 2–ம் வாதி திரு.ரவிச்சந்திரன் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி திரு. சிவசுப்பிரமணியன் பி.சா.1 ஆகவும், 2ம் பிரதிவாதி திரு. நாராயணமூர்த்தி பி.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு பி.சா.2ன் மூலம் பி.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>11. கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வாதம்</u>**

வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தாவா சொத்தினை

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:38:05 +0530

வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகள், ஒரு முனுசாமி சேர்ந்து வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் முன்னிலைக்கு கிரையம் பெற்று தாவா சொத்தினை கூட்டாக அனுபவித்து வந்தனர் என்றும், தாவா சொத்தில் பாகம் பிரிக்கப்படாத முனுசாமியின் ஒரு பாகத்தினை 1–ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், அந்த வகையில் தாவா சொத்தில் வாதிகள் மற்றும் 2 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தலா 11–ல் 1 பாகமும், 1–ம் பிரதிவாதிக்கு 11–ல் 2 பாகமும் உரிமை உள்ளது என்றும், தாவா சொத்தினை கிரையம் வாங்கியதின் நோக்கமே கரடுமுரடாக உள்ள சொத்தினை சீர்படுத்தி மனைப்பிரிவுகளாக பிரித்துக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தில் கிரையம் பெறப்பட்டது என்றும், தாவா சொத்தில் அதற்கான முயற்சி எதுவும் 1 முதல் 8 பிரதிவாதிகள் எடுக்கவில்லை என்றும், அதனால், வாதிகள் தாவா சொத்தில் வாதிகளுக்குரிய பாகத்தினை பிரித்து தரும்படிக்கு வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பு வாதிகள் தரப்பில் பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்டது என்றும், அந்த அறிவிப்பினை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டும் வாதிகளுக்குரிய பாகத்தினை பிரித்து தர முன்வரவில்லை என்றும், தாவா சொத்துக்கான வா.சா.ஆ.2 பட்டாவானது வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகள் பெயரிலேயே உள்ளது என்றும், தாவா சொத்தில் வாதிகளுக்கு 11–ல் 2 பாகம் உரிமை உள்ளது என்பதனை வா.சா.1, வா.சா.2 சாட்சிகளின் சாட்சி மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்களைக் கொண்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ள சங்கதிகளை தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களைக் கொண்டு நிருபிக்கவில்லை என்றும், எனவே வாதிகளின் தாவாவினை அனுமதித்து தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு வாதிட்டார்.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:38:10 +0530

**12. கற்றறிந்த 1, 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதம்**

1, 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தாவா சொத்து வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்தில் வாதிகளுக்கு 11–ல் 2 பாகமும், 2 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தலா 11–ல் 1 பாகமும், 1–ம் பிரதிவாதிக்கு 11–ல் 2 பாகமும் உரிமை உள்ளது என்றும், வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்குரிய பாகத்தினை 1, 3 முதல் 6 பிரதிவாதிகள் பிரித்துக்கொடுக்க தயாராக உள்ளார்கள் என்றும், வாதிகளின் தாவாவினை அனுமதிப்பதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றும் வாதிட்டார்.

**13. கற்றறிந்த 2, 7 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதம்**

2, 7 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தாவா சொத்து வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்தில் வாதிகளுக்கு 11–ல் 2 பாகமும், 2 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தலா 11–ல் 1 பாகமும், 1–ம் பிரதிவாதிக்கு 11–ல் 2 பாகமும் உரிமை உள்ளது என்றும், தாவா சொத்தினை கிரையம் வாங்கியதற்கு பின்னர் வீட்டு மனைகளாக பிரித்து DTCP Approval வாங்கிய பின் சரிசமமாக பிரித்துக்கொள்ள வேண்டும் என்ற வாய்மொழி உடன்படிக்கை வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்டனர் என்றும், ஆனால், வாதிகள் மற்றும் 1, 3 முதல் 6 பிரதிவாதிகள் அதற்கு எந்தவொரு முயற்சியும் மேற்க்கொள்ளவில்லை என்றும், தாவா சொத்தில் DTCP Approval பெறாமல் வாதிகள் தங்களது பாக உரிமையை கேட்கமுடியாது என்றும், தாவா சொத்தில் DTCP Approval பெற்றதற்கு பிறகு பாகத்தினை பிரித்துக்கொடுக்க 2, 7, 8 பிரதிவாதிகள் தயாராக உள்ளார்கள் என்றும், வாதிகளும், 1 முதல் 8 பிரதிவாதிகளும் ஏற்கனவே ஏற்படுத்திக்கொண்ட வாய்மொழி



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:38:16 +0530

உடன்படிக்கையை நிறைவேற்றாத காரணத்தினால் வாதிகளின் தாவாவினை 2, 7, 8 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**14. 1 முதல் 4 எழுவினாக்களுக்கான தீர்வுகள்**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. இத்தாவாவில் வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தைப் பொறுத்து வாதிகளுக்கு 11–ல் 2 பாகம் உரிமையுள்ளது என ஒரு முதல்நிலை தீர்ப்பாணை வழங்கிட வேண்டியும், அதனை அனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கவேண்டியும் மற்றும் இதர பரிகாரங்களுக்காக இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

15. தாவா சொத்தினை வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகள், ஒரு முனுசாமி சேர்ந்து 27.06.2013 தேதியிட்ட கிரைய பத்திரம் முன்னிலைக்கு கிரையம் பெற்று தாவா சொத்தினை கூட்டாக அனுபவித்து வந்தனர் என்றும், தாவா சொத்தில் பாகம் பிரிக்கப்படாத முனுசாமியின் ஒரு பாகத்தினை 1–ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், அந்த வகையில் தாவா சொத்தில் வாதிகள் மற்றும் 2 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தலா 11–ல் 1 பாகமும், 1–ம் பிரதிவாதிக்கு 11–ல் 2 பாகமும் உரிமை உள்ளது என்றும், தாவா சொத்தினை கிரையம் வாங்கியதின் நோக்கமே கரடுமுரடாக உள்ள சொத்தினை சீர்படுத்தி மனைப்பிரிவுகளாக பிரித்துக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தில் கிரையம் பெறப்பட்டது என்றும், தாவா சொத்தில் அதற்கான முயற்சி எதுவும் 1 முதல் 8 பிரதிவாதிகள் எடுக்கவில்லை என்றும், தாவா சொத்தில் வாதிகளுக்கு 11–ல் 2 பாகம் உரிமை உள்ளது என்று வாதிகள்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:38:22 +0530

தரப்பில் வழக்கானது முன்வைக்கப்பட்டுள்ளது.

16. தாவா சொத்து வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்தில் வாதிகளுக்கு 11–ல் 2 பாகமும், 2 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தலா 11–ல் 1 பாகமும், 1–ம் பிரதிவாதிக்கு 11–ல் 2 பாகமும் உரிமை உள்ளது என்றும், வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்குரிய பாகத்தினை 1, 3 முதல் 6 பிரதிவாதிகள் பிரித்துக்கொடுக்க தயாராக உள்ளார்கள் என்று 1, 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கானது முன்வைக்கப்பட்டது.

17. தாவா சொத்து வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்தில் வாதிகளுக்கு 11–ல் 2 பாகமும், 2 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தலா 11–ல் 1 பாகமும், 1–ம் பிரதிவாதிக்கு 11–ல் 2 பாகமும் உரிமை உள்ளது என்றும், தாவா சொத்தினை கிரையம் வாங்கியதற்கு பின்னர் வீட்டு மனைகளாக பிரித்து DTCP Approval வாங்கிய பின் சரிசமமாக பிரித்துக்கொள்ள வேண்டும் என்ற வாய்மொழி உடன்படிக்கை வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்டனர் என்றும், ஆனால், வாதிகள் மற்றும் 1, 3 முதல் 6 பிரதிவாதிகள் அதற்கு எந்தவொரு முயற்சியும் மேற்க்கொள்ளவில்லை என்றும், தாவா சொத்தில் DTCP Approval பெறாமல் வாதிகள் தங்களது பாக உரிமையை கேட்கமுடியாது என்று 2, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கானது முன்வைக்கப்பட்டது.

18. வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவாவினை தகுந்த வாய்மொழி சாட்சிகள் மற்றும் ஆவண சாட்சியங்களை கொண்டு நிருபிக்க வேண்டிய

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.03.13 18:38:28 +0530

பொறுப்பு வாதிகளைச் சார்ந்ததாகும். வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவாவினை தகுந்த சாட்சிகள் மற்றும் ஆவணங்களை கொண்டு நிருபித்துள்ளாரா என்று பார்க்கும்போது, தாவா சொத்து ஆதியில் ஒரு முனியம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதும், முனியம்மாள் 07.04.1956 தேதியன்று தனது குமாரரான பொன்னுசாமி நாயுடுவுக்கு தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி பாத்தியப்படுத்திவிட்டார் என்பதும், தாவா சொத்தினை பொன்னுசாமி அனுபவித்து வந்து இறந்துவிட்டார் என்பதும், பொன்னுசாமியின் இறப்பிற்கு பிறகு தாவா சொத்தினை பொன்னுசாமியின் வாரிசுகள் ராஜேந்திரன், முருகன், அமுதா, கலைச்செல்வி ஆகியோர் அடைந்து அனுபவித்து வந்து அவர்களிடமிருந்து 27.06.2013 தேதியிட்ட கிரைய பத்திரம் முன்னிலைக்கு வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகள், ஒரு முனுசாமி ஆகியோர் சேர்ந்து கிரையம் பெற்றார்கள் என்பதும், தாவா சொத்தினை மேற்படி அனைவரும் அடைந்து கூட்டாக அனுபவித்து வந்தனர் என்பதும், முனுசாமியின் ஒரு பாகத்தினை 1–ம் பிரதிவாதி சிவசுப்பிரமணிய பிள்ளை கிரையம் பெற்றார் என்பதும், தாவா சொத்தில் வாதிகளுக்கு 11–ல் 2 பாகமும், 2 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தலா 11–ல் 1 பாகமும், 1–ம் பிரதிவாதிக்கு 11–ல் 2 பாகமும் பாக உரிமை உள்ளது என்பது இரு தரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும்.

19. வாதிகள் தரப்பில் 1–ம் வாதி லட்சுமி, 2–ம் வாதி ரவிச்சந்திரன் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். வாதிகள் தரப்பில் 27.06.2013 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் இணைய வழி நகல் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் தாவா



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:38:34 +0530

சொத்தினை வாதிகள், 1 முதல் 8 பிரதிவாதிகள் மற்றும் ஒரு முனுசாமி ஆகியோர் சேர்ந்து சரியான மறுபயனுக்கு ராஜேந்திரன் வகையராவிடம் கிரையம் பெற்றதாக வாசகங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது. தாவா சொத்தில் வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்குரிய பாகத்தினை பிரித்துக்கொடுக்க தயாராக உள்ளதாக 1, 3 முதல் 6 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

20. தாவா சொத்தில் மனைப்பிரிவுகளாக பிரித்து DTCP Approval பெற்ற பிறகே பாகப்பிரிபிவினை செய்துகொள்ளவேண்டும் என்று வாதிகளுக்கும், 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் வாய்மொழி உடன்படிக்கை ஏற்பட்டது என்றும், ஆனால், அதனை நிறைவேற்றும் முயற்சியாக வாதிகள் 1, 3 முதல் 6 பிரதிவாதிகள் எவ்வித முயற்சியும் மேற்க்கொள்ளவில்லை என்றும், DTCP Approval பெற்ற பிறகு வாதிகளுக்குரிய பாகத்தினை பிரித்துக்கொடுப்பதற்கு 2, 7, 8 பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றும், அதனால் வாதிகளின் வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று 2, 7, 8 பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள். வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் 2, 7, 8 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லும் எந்தவொரு நிபந்தனை வாசகமும் கண்டு எழுதப்படவில்லை. மேலும், 2, 7, 8 பிரதிவாதிகள் குறிப்பிடும் நிபந்தனைகளின்படி தாவா சொத்தானது கிரையம் பெற்றிருக்கும்பட்சத்தில் அந்த நிபந்தனையை குறிப்பிட்டு வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் எழுதியிருக்கவேண்டும். ஆனால், வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் அவ்வாறான எந்தவொரு நிபந்தனை வாசகமும் கண்டு எழுதப்படவில்லை. 2, 7, 8 பிரதிவாதிகளுக்குரிய பாகத்தினை பொறுத்து DTCP Approval பெறவேண்டுமென்றால் உரிய அரசு அலுவலகத்தில்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:38:40 +0530

முறையிட்டு அதற்கான உத்தரவை பெற 2, 7, 8 பிரதிவாதிகள் முயற்சி செய்யவேண்டுமே தவிர DTCP Approval பெற்ற பிறகுதான் வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகளினுடைய பாகத்தினை பிரித்து தரவேண்டும் என்று எதிர்வழக்குரை மூலம் ஆட்சேபிப்பது சட்டத்திற்கும், இயற்கை நீதிக்கும் எதிரான ஒன்றாகும்.

21. தாவா சொத்தில் வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகளிடையே பாக உரிமை உள்ளது என்று பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் தாவா சொத்தில் உள்ள மனைகளுக்கு DTCP Approval பெற்றபிறகுதான் வாதிகளுக்கும் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் பாகத்தினை பிரித்தளிக்கவேண்டும் என்று 2, 7, 8 பிரதிவாதிகள் ஆட்சேபிப்பது ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை. மேலும், வாதிகள் இத்தாவாவினை தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதிகளுக்குரிய பாகத்தினை பிரித்துத்தரும்படிக்கு 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு கொடுத்துள்ளார். மேற்படி அறிவிப்பினை 1 முதல் 8 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டும், எந்தவொரு பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்பது தாவா ஆவணங்களிலிருந்து அறிய முடிகிறது. வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட 1–ம் வாதியான வா.சா.1 மற்றும் 2–ம் வாதியான வா.சா.2 வாதிகளின் வழக்கினை அனுசரித்தே சாட்சியம் அளித்துள்ளார். 2, 7, 8 பிரதிவாதிகள் வாதிகளுக்கும் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் DTCP Approval பெற்றபிறகுதான் பாகம் பிரித்துக்கொள்ளவேண்டும் என்ற வாய்மொழி உடன்படிக்கை இருந்ததாக எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவ்வாறு எந்தவொரு வாய்மொழி உடன்படிக்கையும் ஏற்படவில்லை என்று வாதிகள் மற்றும் 1, 3 முதல் 6 பிரதிவாதிகளால் மறுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ–1 கிரைய



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:38:45 +0530

பத்திரத்திலேயே அவ்வாறான நிபந்தனை வாசகம் கண்டு எழுதப்படாத நிலையில் வாய்மொழி உடன்படிக்கை இருந்தது என்று 2, 7, 8 பிரதிவாதிகள் கூறுவது ஏற்கத்தக்க வகையிலும், நம்பத்தகுந்த வகையிலும் இல்லை. வாதிதகளுக்கும், 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்தை பொறுத்து DTCP Approval பெற்றபிறகுதான் பாகம் பிரித்துக்கொள்ளவேண்டும் என வாய்மொழி உடன்படிக்கை இருந்தது என்பதனை 2, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் தகுந்த சாட்சியங்களைக் கொணடு நிரூபிக்கவில்லை.

22. தாவா சொத்தில் வாதிகள் மற்றும் 2 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தலா 11–ல் 1 பாகம் மற்றும் 1–ம் பிரதிவாதிக்கு 11–ல் 2 பாகம் உரிமை உள்ளது என வாதிகள் தரப்பில் தகுந்த வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்களைக் கொண்டு நிரூபித்துள்ளதால் தாவா சொத்தில் வாதிகளுக்கு 11–ல் 2 பாகம் உரிமை உள்ளது என எழுவினா 1ஐ பொறுத்து வாதிகளுக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

23. மேலும் வாதிகள் தாவா சொத்தைப் பொறுத்து சட்டப்படியான பாகப்பரிவினை ஏற்படும் வரையில் 1 முதல் 8 பிரதிவாதிகள் தாவா சொத்தினை எவ்வித பராதீனமும் செய்யக்கூடாது என நிரந்தர தடையுத்தரவு பரிகாரத்தினை வழங்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. தாவா சொத்தில் வாதிகளுக்கு 11–ல் 2 பாகமும், 2 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தலா 11ல் 1 பாகமும் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு 11ல் 2 பாகமும் உரிமை உள்ளது என எழுவினா 1ஐ பொறுத்து இந்நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது. தாவா சொத்தில் வாதிகளுக்கும், 11ல் 2 பாகம் உரிமையுள்ளதால் தாவா சொத்தில் வாதிகளின் பாகத்தினைப் பொறுத்து 1 முதல் 8 பிரதிவாதிகள் எவருக்கும் பாராதீனம் செய்யாமல் இருக்கும் பொருட்டு நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் மற்றும்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:38:51 +0530

பாகப்பிரிவினை பரிகாரம் வாதிகளுக்கு அளிக்கத்தக்கது என்று எழுவினா 2 மற்றும் 3ஐ பொறுத்து வாதிகளுக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

24. எழுவினாக்கள் 1 முதல் 3 ஐ பொறுத்து வாதிகளுக்கு ஆதரவாக தீர்வுகாணப்பட்டுள்ளதால் வேறு எந்த பரிகாரமும் வாதிகளுக்கு அளிக்கத்தக்கதல்ல என்று எழுவினா 4ஐ பொறுத்து இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக தாவா சொத்தில் வாதிகளுக்கு 11ல் 2 பாகம் உரிமையுள்ளது என முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரத்தினைப் பொறுத்து வாதிகளுக்கு வழங்கியும், வாதிகளின் தாவாவானது செலவுத்தொகையின்றி அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மாண்பமை உச்ச நீதிமன்றம் வழங்கிய Kattukandi Edathil Krishnan and Anr. /Vs/ Kattukandi Edathil Valsan and Ors. என்ற வழக்கின் முன் தீர்ப்பின் படி இத்தாவாவில் பிறப்பித்துள்ள தீர்ப்பாணையின் படி இறுதிநிலை தீர்ப்பாணை நடவடிக்கைகளுக்காக அசல் வழக்கானது 28.04.2026ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:38:57 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>** :

வா.சா.1 – லஷ்மி, க/பெ.ரவிக்குமார்

வா.சா.2 –ரவிச்சந்திரன், த/பெ.நாராயணன்,

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| | | |
|---|---|---|
| வ.சா–ஆ.1 | 27.06.2013 | வாதிகளும், 1 முதல் 8 பிரதிவாதிகள் சேர்ந்து கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திரத்தின் இணையவழி நகல் |
| வ.சா–ஆ.2 | – | வாதிகள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகள் பெயரில் உள்ள தாவா சொத்திற்கான பட்டா நகல். |
| வ.சா–ஆ.3 | 30.06.2022 | வாதிகள் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |
| வ.சா–ஆ.4 | 16.03.2023 | வாதிகள் 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |
| வ.சா–ஆ.5 | – | வாதிகள் கொடுத்த வழக்கறிஞர் அறவிப்பினை 1ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை. |
| வ.சா–ஆ.6 | – | வாதிகள் கொடுத்த வழக்கறிஞர் அறவிப்பினை 2ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை. |
| வ.சா–ஆ.7 | – | வாதிகள் கொடுத்த வழக்கறிஞர் அறவிப்பினை 5ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை. |
| வ.சா–ஆ.8 | – | வாதிகள் கொடுத்த வழக்கறிஞர் அறவிப்பினை 6ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை. |
| வ.சா–ஆ.9 | – | வாதிகள் கொடுத்த வழக்கறிஞர் அறவிப்பினை 8ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை. |
| வ.சா–ஆ.10 | – | திருப்பப்பட்ட அஞ்சலக உறை |



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:39:04 +0530

| | | |
|---|---|---|
| வ.சா–ஆ.11 | – | திருப்பப்பட்ட அஞ்சலக உறை |
| வ.சா–ஆ.12 | – | திருப்பப்பட்ட அஞ்சலக உறை |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி</u>**

பி.சா.1 – சிவசுப்பிரமணிய பிள்ளை, த/பெ.அய்யம்பெருமாள் பிள்ளை
பி.சா.2 – நாராயணமூர்த்தி, த/பெ.தட்சிணாமூர்த்தி

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் –</u>**

| | | |
|---|---|---|
| பி.சா–ஆ.1 | – | DTCP Approval வாங்குவதற்காக விதிமுறைகளின்படி போடப்பட்ட வரைபடம். |

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 18:39:11 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு